DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 8/2026

Miscellaneous :

Sessions : PW1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேஷ் |
| Father / Husband Name | ஆதிமூலம் |
| Village | நெல்வேலி |
| Taluk | உத்திரமேரூர் |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நெல்வேலியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இ றந்து போன ஆதிமூலம் என்பவர் எனது தந்தை ஆவார். கடந்த 22.06.2025 ம் தேதி மாலை 6.00 மணிக்கு எனது அப்பா வீட்டில் இருந்து நெல்வாயிக்கு நடந்து சென்றபோது நெல்வாய் கூட்ரோடில் இருந்து உத்திரமேரூர் நோக்கி சென்ற எமகா இருசக்கர வாகனம் வேகமாக வந்து எனது அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது எனது அப்பாவிற்கு தலை கை கால்களில் அடிப்பட்டு இருந்தது. நான் காயம் பட்ட எனது அப்பாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்தேன். பின்னர் எனது அப்பா சிகிச்சை பலனின்றி 01.07.2025 ம் தேதி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் எப்பொழுது கொடுத்தேன் என்றால் 22.06.2025 ம் தேதி புகார் கொடுத்தேன். புகார் கொடுக்கும் போது என்னுடன் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 9 வரையானவர்கள் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி எங்கள் அனைவரையும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்பு எங்களை அனைவரையும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் பார்வை மகசர் தயார் செய்யும் பொழுது புவனேஷ் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்களை விசாரித்தார்கள். மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மேற்படி விஷ்வநாதன் என்னிடம் சொன்னார். மேற்படி இருவரையும் 23.06.2025 ம் தேதி தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

9/4/26

Judicial Magistrate No.II

Madurantakam

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 8/2026
Miscellaneous :
Sessions : PW2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | லட்சுமணன் |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | நெல்வாய் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 64 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நெல்வாயில் வசித்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன ஆதிமூலம் எனது சித்தப்பா ஆவார். கடந்த 22.06.2025 ம் தேதி மாலை 6.00 மணிக்கு எனது சித்தப்பா ஆதிமூலம் அவரின் வீட்டில் இருந்து நெல்வாய் கடைக்கு வரும்பொழுது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். மேற்படி விபத்தில் அவருக்கு கை கால்களில் அடிப்பட்டது. பின்னர் நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது கை கால்களில் அடிப்பட்டு சிகிச்சையில் இருந்தார். பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி 01.07.2025 ம் தேதி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் காயம் பட்டவர் எனது உறவினர் என்றால் சரிதான். புகார் கொடுக்க நானும் என்னுடம் பட்டியல் சாட்சிகள் 1 , 2 மற்றும் 4 முதல் 9 வரையானவர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்களா என்றால் ஆமாம். எங்கள் அனைவரையும் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் எங்களை வேறு எங்கு போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

கோ. லட்சுமணன்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
9/4/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 8/2026

Miscellaneous :

Sessions : PW3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மோனேஷ் |
| Father / Husband Name | சந்திரன் |
| Village | இரட்டைமங்கலம் |
| Taluk | உத்திரமேரூர் |
| Age | 25 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டைமங்களத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 23.06.2025 ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் கடைக்கு சென்றபோது போலிசார் விபத்து சம்மந்தமாக நெல்வாயில் விசாரித்து மார்க் செய்தார்கள். என்னுடன் விஷ்வநாதன் என்பவர் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். என்னுடன் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 9 வரையானவர்கள் காவல் நிலையத்திற்கு புகார்கொடுக்கும் போது சென்றோம் என்றால் சரிதான்.அப்பொழுதுதான் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மறுநாள் நான் நெல்வாய் கடைக்கு அருகே இருந்தபோது விசாரித்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்த தாள் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி தாளை நான் படித்து பார்த்தேனா என்றால் ஆமாம். அதில் என் பெயர் மற்றும் விலாசம் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி தாளில் மட்டும் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எங்களை புகார் கொடுக்கும் போது தான் விசாரித்தார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக சம்பவயிடத்தில் விசாரித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதப்பட்ட தாளில் கையொப்பம் செய்திருந்தால் அதில் உள்ள எனது பெயர் மற்றும் விலாசத்தை சரிபார்த்திருப்பேன் என்றாலும் நான் வெள்ளை தாளில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness ... in the presence of the acc... admitted by the witness to b... 9/4/26

Judicial Magistrate No.II

Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 8/2026
Miscellaneous :
Sessions : PW4
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஹேம்குமார் |
| Father / Husband Name | ராஜேந்திரன் |
| Village | நெல்வேலி |
| Taluk | உத்திரமேரூர் |
| Age | 23 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நெல்வேலியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. கடந்த 22.06.2025 ம் தேதி மாலை 6.00 மணிக்கு எனது தாத்தா ஆதிமூலம் என்பவருக்கு நெல்வாய் கூட்ரோடு அ ருகே எமஹா இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 23.06.2025 ம் தேதி நானும் மோனேஷ் என்பவரும் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது தாத்தாவை பார்க்க சென்றபோது விஸ்வநாதன் பங்க் கடை அருகே போலிசார் எனது தாத்தாவிற்கு விபத்து ஏற்பட்ட இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி எங்கள் முன்னிலையில் போலிசார் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை**

R. Hemkumar

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
9/4/26
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 8/2026
Miscellaneous :
Sessions : PW5
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பார்த்தீபன் |
| Father / Husband Name | மணவாளன் |
| Village | இரட்டமங்கலம் |
| Taluk | உத்திரமேரூர் |
| Age | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **09.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டைமங்களத்தில் வசித்து தனியார் நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன ஆதிமூலம் எனது தாத்தா ஆவார். அவர் கடந்த 22.06.2025 ம் தேதி எனது தாத்தா நெல்வாய்க்கு கடைக்கு போகும் போது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக தகவல் சொன்னார்கள். பின்னர் 01.07.2025 ம் தேதி எனது தாத்தா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் தாத்தாவின் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்து குறித்து புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். அப்பொழுது என்னுடன் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையனாவர்கள் காவல் நிலையம் வந்தார்கள் என்றால் சரிதான். அப்பொழுதுதான் போலிசார் எனது பெயர் மற்றும் விலாசத்தை எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் என்னை எங்கும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

M. [signature]

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
[signature] 9/4/26
Judicial Magistrate No.II
Madurantakam